செயற்பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், திருச்சி
அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: பொறி.கொ.ரத்தினவேல்,
செயற்பொறியாளர், பொ.ப.து.,

**செயல்முறை ஆணை எண். 924/ 2023/ நி.எ.2/ நாள்: 14.02.2024.**

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து., - தமிழ்நாடு அமைச்சு பணித்தொகுதி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட - Notification No.07/ 2022, நாள்:30.03.2022. ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி-IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது - செல்வி.ந.பவித்ரா, இளநிலை உதவியாளர் (பிறந்த தேதி: 30.04.1996) - பணிவரன்முறை செய்தும் மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்: 1970/ PSD-D2/ 2023/ நாள்: 31.08.2023.
2. முதன்மை தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்: எஸ்.2(1)/ 022209/ 2023/ நாள்: 30.11.2023.
3. தலைமைப்பொறியாளர், பொபது., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செ.மு.ஆணை எண்: எஸ்.1(2)/ 6842-5/ 2023/ நாள்: 05.12.2023.
4. கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண்:கோ.32/2023/நி.2/(3558/23)/ நாள்:11.12.2023
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.கோ.924/ 2023/ நிஎ.2/ நாள்:12.12.2023
6. செல்வி.ந.பவித்ரா, இளநிலை உதவியாளர் பணியேற்பு கடித நாள்:14.12.2023.

*******

பார்வை எண்.(1)-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட Notification No.07/ 2022, நாள்:30.03.2022. ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான போட்டித் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, பார்வை எண்.(2)-ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, நிலை எண்.8, ரூ.19,500 - ரூ.71,900 என்ற ஊதிய விகிதத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, பார்வை (3) முதல் (5) வரை காணும் செயல்முறை ஆணைகளின்படி செல்வி.ந.பவித்ரா (பிறந்த தேதி: 30.04.1996) இக்கோட்ட அலுவலகத்தில் 14.12.2023 மு.ப. முதல் இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

(த.பி.பா.)

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் விதி 28(1)-ன்படி, செல்வி.ந.பவித்ரா, இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 14.12.2023 மு.ப. முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவக்கி வைத்தும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இவர் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், தகுதிகாண்பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு பணியாளர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெறும் பொதுப்பணித்துறை மற்றும் சார்நிலை பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-I, பொதுப்பணித்துறை மற்றும் சார்நிலை பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-II மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை ஆகிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் ஆகிய நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்நேர்வில், இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தகுதிபெறாத விடுப்புகளை துய்ப்பின் தகுதிகாண்பருவம் நீட்டிக்கப்படும் எனும் நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

14/2/24

செயற்பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (க&ப) கோட்டம், திருச்சி.

14/2/24 14/2/24

**பெறுநர்:**
**செல்வி.ந.பவித்ரா,**
**இளநிலை உதவியாளர், பொ.ப.து.,**
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம்,
திருச்சி.